1995 நவம்பர் 9]

ஈட்டைப் பற்றிச் சொல்லவில்லை. நஷ்ட ஈடு என்று கொடுக்கிறபோது, அதனுடைய மதிப்புக்கேற்றவாறு, - அரசு என்ன மதிப்பிடுகிறதோ அந்த மதிப்புத் தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிடமுடியும். அதாவது காம்பன்சேஷனாகக் கொடுத்து விடமுடியும். மற்றபடி வேலை என்று கொடுக்கப்படும்போது, அவர்களுடைய தகுதி அடிப்படையில், அவர்கள் ஏழைகளாக இருந்தால், ஏழ்மை நிலையைப் பார்க்கிறார்கள். அதே நேரத்தில் குடும்பத்தினுடைய நிலைமையையும் பார்க்கவேண்டும். நன்றாகப் படித்தவர்களாக இருந்தால் பெரிய வேலை கொடுப்பார்கள். படிக்கவில்லை என்றால், தகுதிக்கேற்றவாறு லேபர் வேலை கொடுப்பார்கள் என்றுதான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 63, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

***22125*—திரு. வெ. தமிழரசு :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தென்னங்குடிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னும் கட்டுமானப் பணி துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் பணி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தென்னங்குடிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிலம் இன்னும் பெறப்படாத நிலையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இங்கே வருவதற்கு முன்பாக, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே, இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 9

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய நிலம் அங்கே இருப்பதாகவும், அதை எடுத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தான் இந்தத் துறையின் அதிகாரிகள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கேள்வி கேட்கப்பட்டவுடனேயே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அணுகி, உடனடியாக அந்த இடத்தை கையகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இப்போது இடம் கிடைத்திருக்குமானால், அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு, வருகிற நிதியாண்டிலேயே பணத்தை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப்படும்போது, அங்கே இருக்கிற பணியாளர்களுக்கும், வெளியிலே இருந்து வருகிற பணியாளர்களுக்கும், மற்றவர்களுக்கும், செவிலியர்களுக்கும் அங்கேயே கட்டிடங்கள் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிக முக்கியமான ஒரு பணி தான். அவர்களுக்கும் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சினையின் காரணமாக முதல் கட்டமாக மருத்துவமனைக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டிவிட்டு அதற்குப் பின்புதான் அவர்களுக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று ஒரு முடிவை நாங்கள் எடுத்து இருக்கிறோம். எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம், இது சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தென்னங்குடிபாளையம் பற்றிய கேள்வி. நீங்கள் ஒரு மாவட்டத்தைத் தாண்டி இருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, தென்னங்குடிபாளையம் பற்றிக் கேளுங்கள்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற நிதியாண்டில் அதற்குண்டான வேலைகள் முழுமையாகி இருந்தால் நிதி ஒதுக்குவதாகக் கூறினார்கள். சில இடங்களில் குறிப்பாக என்

1995 நவம்பர் 9]

தொகுதியைக் கூடச் சொல்லலாம். கடந்த நான்கு ஆண்டுகளாக இடம் ஒதுக்கப்பட்டு, பணம் கட்டப்பட்டு, அரசாங்கத்தால் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டும், இதுவரையில் கட்டடம் கட்டப்படவில்லை. அது கட்டப்படுமா? இதுபோன்ற நிலைமை தமிழ்நாடு முழுவதும் இருந்தால் அவற்றை உடனடியாக கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பார்ட் - 2 ஸ்கீமின் போது முதலில் 30 கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் தான் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் விவாதத்தின் போது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டி என்று நடக்கும் - அந்த கமிட்டியிலே விவாதிக்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் தெரிவித்தோம். மொத்தம் 70 இடங்களில் எங்களுக்கு இடம் தயாராக இருக்கிறது, ஆனால் 30 இடங்களுக்கு மட்டும் தான் பணம் நிதித்துறை ஒதுக்கித் தருவதாக சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் தெரிவித்தவுடனேயே 70 இடங்களுக்கு உண்டான பணத்தை முழுமையாக ஒதுக்கி, எங்கெங்கே இடம் இருக்கிறதோ அத்தனை இடங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நீங்கள் பணத்தை ஒதுக்கித் தாருங்கள் என்று உத்தரவிட்டு, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுவிட்டது. இப்போது அந்த வேலைகள் தொடங்குகிற தருவாயில் இருக்கிறது. எனவே, எத்தனை இடங்களில் இடம் இருந்ததோ அத்தனை இடங்களுக்கும் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு, அதேபோல முயற்சி எடுத்து இடங்களைப் பெற்று இருக்கிறோம். இந்த இடங்களுக்கு வருகிற நிதியாண்டிலே பணம் ஒதுக்கப்படும். அதிலே கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் *:* வினா எண் 64, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

64—

மருத்துவர்கள் தங்க கட்டிடம் கட்டுதல்.

***36504—**திரு. கி. தருமலிங்கம் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—